# நாம் போற்றிப் பாதுகாத்து வரும் சமூகநீதி பாதிக்கப்படும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை...! முதல் பக்கத் தொடர்ச்சி

இது வெறும் எண்ணிக்கையைப் பற்றியது மட்டுமல்ல – இது நமது அதிகாரம், நமது உரிமைகள் மற்றும் நமது எதிர்காலத்தின் நலன்களைப் பற்றியது. பிரதிநிதித்துவம் குறைந்து வருவதால், நமது மாநிலங்கள் நமக்குத் தேவையான நிதியைப் பெறுவதற்குக் கூட போராட வேண்டி வரும்.

**நமது விருப்பம் இல்லாமல் நமக்கான சட்டங்கள் வடிவமைக்கப்படும். நமது மக்களைப் பாதிக்கும் முடிவுகள், நம்மை அறியாதவர்களால் எடுக்கப்படும். பெண்கள் அதிகாரம் அடைவதில் பின்னடைவுகளைச் சந்திப்பார்கள். மாணவர்கள் முக்கிய வாய்ப்புகளை இழப்பார்கள். உழவர்கள் ஆதரவின்றி பின்தங்குவார்கள். நமது பண்பாடு, அடையாளம் மற்றும் முன்னேற்றம் ஆபத்தைச் சந்திக்கும். காலம் காலமாக நாம் போற்றிப் பாதுகாத்து வரும் சமூகநீதி பாதிக்கப்படும்.**

**குறிப்பாக பட்டியலின, பழங்குடி மக்கள் அதிகம் பாதிக்கப்படுவார்கள். தொகுதிகளின் எண்ணிக்கையைக் குறைக்க அனுமதித்தாலோ அல்லது நமது மாநிலப் பிரதிநிதித்துவத்தை குறைக்க அனுமதித்தாலோ, நம் சொந்த நாட்டில் நாமே அரசியல் அதிகாரம் இழந்த குடிமக்களாக மாறும் அபாயம் உள்ளது. எனவேதான், தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்தைச் சாதாரணமாகக் கருதக் கூடாது என்று சொல்கிறேன்.**

### இது நியாயமான தொகுதி மறுசீரமைப்பை வலியுறுத்தும் போராட்டம்!

இன்னொன்றையும் நான் தெளிவாகச் சொல்கிறேன் - ஜனநாயகப் பிரதிநிதித்துவத்தை வலுப்படுத்தும் எந்தவொரு நடவடிக்கையையும் நாம் எதிர்க்கவில்லை. ஆனால் அந்த நடவடிக்கையானது, நியாயமான அரசியல் பிரதிநிதித்துவத்தை பாதிக்கக்கூடாது என்றுதான் சொல்கிறோம்.

இந்தப் போராட்டம் தொகுதி மறுசீரமைப்புக்கு எதிரானது அல்ல; இந்தப் போராட்டம் நியாயமான தொகுதி மறுசீரமைப்பை வலியுறுத்துகிறது என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வீர்கள் என்று நினைக்கிறேன்.

இதனை உணர்ந்து தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தை நான் கூட்டினேன்.

### அரசியல் பிரதிநிதித்துவத்திற்கு நேரடி அடி!

தற்போதைய மக்கள்தொகை அடிப்படையில் தற்போதுள்ள 543 மக்களவைத் தொகுதிகள் மறுசீரமைப்பு செய்யப்பட்டால், தமிழ்நாடு 8 இடங்களை இழக்கும் என்பதை நான் தெளிவுபடுத்தினேன். நாடாளுமன்றத்தின் மொத்த இடங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டால், தமிழ்நாடு 12 இடங்களை இழக்க நேரிடும். இது நமது அரசியல் பிரதிநிதித்துவத்திற்கு நேரடி அடியாகும் என்று சொன்னேன்.

மறுநாளே, கோயம்புத்தூரில் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா அவர்கள் ஒரு நிகழ்ச்சியில் பங்கெடுத்து உரையாற்றியபோது, “தமிழ்நாடு மற்றும் பிற தென் மாநிலங்கள் விகிதாச்சார அடிப்படையில் நாடாளுமன்ற இடங்களை இழக்காது” என்று கூறினார். உள்துறை அமைச்சரின் விளக்கம் தெளிவாக இல்லை, குழப்பமாகத்தான் இருந்தது.

### எப்போதும் மாநில உரிமைகளைப் பறிக்கிற கட்சி பா.ஜ.க.!

2023-ஆம் ஆண்டு தெலங்கானா மாநிலத்தில் பரப்புரை செய்ய வந்த பிரதமர் மோடி அவர்கள், “சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தி மக்கள்தொகை அடிப்படையில் சமூகங்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என காங்கிரஸ் கட்சி சொல்கிறது. அடுத்ததாக தொகுதி மறுவரையறை நடக்க உள்ளது. காங்கிரஸ் கட்சி சொல்வதைப் போல மக்கள் தொகையின் அடிப்படையில் மக்களவைத் தொகுதிகள் மறுவரையறை செய்யப்பட்டால், தென் மாநிலங்கள் 100 தொகுதிகளை இழக்க நேரிடும். தென்னிந்திய மக்கள் இதனை ஏற்பார்களா?” என்று கேட்டார் பிரதமர்.

இதனடிப்படையில் பார்த்தால், தொகுதிகளின் எண்ணிக்கை குறையும் என்பதை அவரே ஒப்புக் கொண்டுள்ளார் என்பதை உணரலாம். எப்போதும் மாநிலங்களை, மாநில உரிமைகளைப் பறிக்கிற கட்சியாக பா.ஜ.க. இருந்துள்ளது. அவர்கள் தங்களது உள்நோக்கத்தை தொகுதி மறுசீரமைப்புத் திட்டத்தில் செய்ய நினைக்கிறார்கள். இதனை எந்த மாநிலமும் அனுமதிக்கக் கூடாது. இந்த அச்சுறுத்தலை உணர்ந்து, முன்னெப்போதும் இல்லாத ஒற்றுமையுடன் தமிழ்நாடு செயல்பட்டு வருகிறது. இதேபோன்ற ஒற்றுமையை இந்த அரங்கிலுள்ள அனைத்து மாநிலங்களும் காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

> **எப்போதும் மாநிலங்களை, மாநில உரிமைகளைப் பறிக்கிற கட்சியாக பா.ஜ.க. இருந்துள்ளது. அவர்கள் தங்களது உள்நோக்கத்தை தொகுதி மறுசீரமைப்புத் திட்டத்தில் செய்ய நினைக்கிறார்கள். இதனை எந்த மாநிலமும் அனுமதிக்கக் கூடாது. இந்த அச்சுறுத்தலை உணர்ந்து, முன்னெப்போதும் இல்லாத ஒற்றுமையுடன் தமிழ்நாடு செயல்பட்டு வருகிறது. இதேபோன்ற ஒற்றுமையை இந்த அரங்கிலுள்ள அனைத்து மாநிலங்களும் காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.**

### “நியாயமான தொகுதி மறுசீரமைப்புக்கான கூட்டு நடவடிக்கைக் குழு!”

இந்தக் கூட்டு நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்கள் குறித்த உங்கள் மதிப்புமிக்க பரிந்துரைகளைப் பகிர்ந்து கொள்ள அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் குழுவுக்கு ‘நியாயமான தொகுதி மறுசீரமைப்புக்கான கூட்டு நடவடிக்கைக் குழு’ என்று பெயரிட நான் முன்மொழிகிறேன்.

நாம் தொகுதி மறுசீரமைப்புக்கு எதிரானவர்கள் அல்ல; நியாயமான தொகுதி மறுசீரமைப்புக்கு ஆதரவானவர்கள் என்பதை இந்தப் பெயரே சொல்லும்!

### உரிமையை நிலைநாட்ட தொடர் நடவடிக்கை அவசியம்!

ஒரு நாள் நாம் கூடி – ஆலோசித்து – தீர்மானம் நிறைவேற்றுவதில் மட்டுமே இந்தப் போராட்டம் முடிவடைந்துவிடாது. உரிமையை நிலைநாட்டிட தொடர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது மிக அவசியமாகிறது.

ஒன்றிய அரசை வலியுறுத்துவது ஒருபக்கமும் - இன்னொரு பக்கம் இதுகுறித்து மக்களிடம் விளக்கிட- மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்திட இந்த கூட்டு நடவடிக்கைக் குழு மிக அவசியம் என்றே கருதுகிறேன்.

### சட்ட நடவடிக்கைகளை வரையறுக்க வல்லுநர்கள் குழு!

நமது அரசியல்ரீதியான எதிர்ப்பைச் சட்டபூர்வமாக எப்படி நடத்துவது என்பது குறித்து அனைவரும் ஆலோசனைகளைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். அரசியல் மற்றும் சட்ட நடவடிக்கைகளை வரையறுப்பதற்காக வல்லுநர்களின் குழுவை அமைக்க நான் முன்மொழிகிறேன். ஒட்டுமொத்த முன்மொழிவு குறித்த தங்கள் கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளுமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

ஒற்றுமை உணர்வோடு அனைவரும் ஒன்றுபட்டுப் போராடினால்தான் வெற்றி பெற முடியும். எந்தச் சூழலிலும் நமது பிரதிநிதித்துவம் குறையக் கூடாது; குறையவிடக் கூடாது என்ற உறுதியோடு போராடுவோம். நியாயமான தொகுதி மறுசீரமைப்பை அடையும் வரை நாம் இணைந்து போராடுவோம்.

எங்களது அழைப்பை ஏற்று வருகை தந்துள்ள மாநில முதலமைச்சர்கள் - துணை முதலமைச்சர்கள் - அரசியல் தலைவர்கள் - நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இக்கூட்டத்தில், கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன், தெலங்கானா மாநில முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி, பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான், கர்நாடக மாநில துணை முதலமைச்சர் டி.கே. சிவகுமார், கேரள மாநில இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பினாய் விஸ்வம், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் மாநில தலைவர் கும்பக்குடி சுதாகரன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் மாநில பொதுச் செயலாளர் சலாம், கேரளா காங்கிரஸ் கட்சியின் பிரான்சிஸ் ஜார்ஜ், கேரளா காங்கிரஸ் (மணி) கட்சியின் ஜோஸ் கே. மணி, புரட்சிகர சோசலிஸ்ட் கட்சியின் பிரேம சந்திரன், தெலங்கானா மாநில இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் மகேஷ் கவுட், பாரத் ராஷ்டிர சமிதி கட்சியின் கே.டி. ராமாராவ் மற்றும் வினோத் குமார், அகில இந்திய மஜ்லிஸ்-இ-இத்தேஹாதுல் முஸ்லிமீன் கட்சியின் இம்தியாஸ் ஜலில், பஞ்சாப் மாநில சிரோன்மணி அகாலி தள கட்சியின் சர்தார் பல்வீந்தர் சிங் மற்றும் தல்ஜித் சிங் சீமா, பிஜு ஜனதா தளக் கட்சியின் அமர் பட்நாயக் மற்றும் சஞ்சய் குமார் தாஸ் பர்மா ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும், இக்கூட்டத்தில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர். பாலு, கனிமொழி கருணாநிதி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## பொள்ளாச்சி புதிய நூலகம் ஏப்ரலில் திறக்கப்படவிருக்கிறது!

# திருச்சியில் ரூ.290 கோடி மதிப்பில் - மாபெரும் கலைஞர் நூலக பணி தொடக்கம்!

## சட்டப்பேரவையில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பெருமிதம்!



*சென்னை, மார்ச் 23 -* சட்டப்பேரவையில் பொள்ளாச்சியில் புதியதாக புதுப்பிக்கப்பட்ட நூலகம் வரும் ஏப்ரல் மாதம் 10 ஆம் தேதி திறக்கப்படவிருக்கிறது என்றும் திருச்சியில் ரூ.290 கோடி மதிப்பீட்டில் ஒரு மாபெரும் கலைஞர் நூலகத்திற்கான பணியை முதல்வர் அவர்கள் துவக்கித்துள்ளார்கள் என்றும் அ.தி.மு.க. உறுப்பினர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

நூலகம் கட்டுவதற்கு வழங்கப்பட்ட காலிமனையை பொள்ளாச்சி நகராட்சியிடமிருந்து பெற்று மாவட்ட நூலகத்திற்கு வழங்க அரசு ஆவன செய்யுமா? என்று அ.தி.மு.க. உறுப்பினர் கேட்ட கேள்வியைத் தொடர்ந்து பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி அளித்த பதில் வருமாறு:-

அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திருச்சி மாவட்டத்தில் ஏறத்தாழ 290 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமையவிருக்கின்ற ஒரு மாபெரும் கலைஞர் நூலகத்திற்கான பணியை இன்று காலை துவக்கி வைத்திருக்கிற முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, தங்களின் அனுமதியோடு இவ்வினாவிற்கான பதிலை அளிக்கிறேன்.

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி மரப்பேட்டை பகுதியில் ஏற்கெனவே செயல்பட்டு வந்த பழுதடைந்த எண் 1 முழுநேர கிளை நூலகத்திற்கான கட்டடத்தை இடித்துவிட்டு, அதே இடத்தில் 1,862 சதுர அடி பரப்பளவில் இரண்டு தளங்களுடன் பொதுப் பணித் துறை மூலம் புதிய கட்டடம் கட்டும் பணிகள் துவங்கப்பட்டு, அப்பணிகள் நிறைவடைந்திருக்கின்றன. எஞ்சி யிருக்கும் சிறு பணிகளும் விரைவில் முடிக்கப்பட்டு, 10-4-2025க்குள் கட்டடம் நூலகத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டு, வாசகர்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும். எனவே, பொள்ளாச்சி நகராட்சியிடமிருந்து காலிமனையை நூலகம் கட்டுவதற்கு நில மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் போட்டித் தேர்வுக்கு தயாராகும் இளைய சமுதாயத்தை மனதில் வைத்து கேட்கப்பட்ட ஒரு நல்ல கேள்வி. ஏற்கெனவே 1,762 square feetல் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. கண்டிப்பாக நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருடன் இதுகுறித்து கலந்துபேசி, அதற்கான கருத்துருக்கள் பெறப்பட்டு, இன்னும் தேவைப்படுகின்றபட்சத்தில் கண்டிப்பாக அதில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இங்கே இருக்கின்ற அனைவருக்குமே தெரியும், நூகலத்தினுடைய பொற்காலம் என்று சொன்னால், இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிற திராவிட மாடல் ஆட்சி என்பதற்கு பல சான்றுகள், ஏன் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் இருக்கக்கூடிய பொள்ளாச்சி தொகுதி, அந்த மாவட்டம் சார்ந்து கிட்டத்தட்ட 55 நூலகங்கள் கட்டிக் கொண்டிருக்கிறோம்.

இவை அல்லாமல், தமிழ்நாடு முழுவதும் ஊர்ப்புற நூலகமாக இருந்தாலும், கிளை நூலகமாக இருந்தாலும், முழுநேர கிளை நூலகமாக இருந்தாலும், மாவட்ட மைய நூலகமாக இருந்தாலும், 821 நூலகங்கள் கட்டுகின்ற பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், கோயம்புத்தூர் மாவட்டத்திற்காக, பெருமைத் தேடித் தருகின்ற அளவிற்கு தந்தை பெரியார் அவர்களுடைய பெயரில் மிகப் பெரிய நூலகம் கட்டுகின்ற பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவே, எங்கெல்லாம் நூலகம் கட்டித் தர முடியுமோ, அது கண்டிப்பாக கட்டித் தருகின்ற பணிகளில் நாங்கள் முழுமையாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், தவறுதலாக 62 சென்ட் நிலம் மாற்றப்பட்டிருக்கிறது என்று சொன்னால், உரிய அமைச்சருடன் உட்கார்ந்து பேசி, அதற்கான கருத்துரு பெறப்பட்டு, அதற்கான உரிய நடவடிக்கை தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டு தல்களின்படி எடுக்கப்படும் .

2012 ஆம் ஆண்டு முதல் இந்த issues ஓடிக்கொண்டிருக்கிறது. அன்றைக்கு இருந்த ஆணையர் அவர்கள் estimate கொடுத்து, அதற்கான பணத்தை கொடுங்கள் என்று கேட்டிருந்தால், அன்றையதினமே இதனை முடித்திருக்கலாம். 2019 ஆம் ஆண்டு நாம் என்ன செய்தோம் என்றால், உடனடியாக இடைப்பட்ட காலத்தில் வாகர்கள் பாதிக்காத அளவில் ஒரு தாலுகா அலுவலகத்தில் நடத்திவிட்டு, இருக்கின்ற அந்தப் பழுதடைந்த இடத்தை முழுமையாக இடித்துவிட்டு, 1,762 சதுர அடியில் புதிதாக நாங்கள் கட்டிவிட்டோம். 10-4-2025 அன்று அதனை நாங்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்துவிடுவோம். இருந்தாலும் அண்ணன் அவர்கள் சொல்கின்ற அந்தக் கருத்தின் அடிப்படையில் கண்டிப்பாக சம்பந்தப்பட்ட அமைச்சருடன் உட்கார்ந்து பேசி, அதற்கான நல்ல ஒரு தீர்வை கண்டிப்பாக எடுப்போம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்தார்.



நேற்று முன்தினம் (21.03.2025) தலைமைச் செயலகத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பி. கீதா ஜீவன் தலைமையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் 2025–2026 ஆம் ஆண்டிற்கான வரைவு கொள்கை விளக்க குறிப்பு, அறிவிப்புகள் மற்றும் துறையின் செயல்பாடுகள் குறித்து அனைத்து மாவட்ட சமூக நல அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அரசுச் செயலாளர் ஜெயஸ்ரீ முரளிதரன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அரசு கூடுதல் செயலாளர் ச.வளர்மதி, சமூக நல ஆணையர் திருமதி ஆர். லில்லி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## திருப்பூர் மத்திய மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளில்

# பொது இடங்களில் வைக்கப்பட்டுள்ள கழகக் கொடிக் கம்பங்களை அகற்றிடுக!

## மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., வேண்டுகோள்!

*திருப்பூர், மார்ச் 23 -* தி.மு.கழகத்தின் அறிவிப்புக்கிணங்க திருப்பூர் மத்திய மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் பொது இடங்களில் வைக்கப்பட்டுள்ள கழகக் கொடிக் கம்பங்களை உடனடியாக அகற்றிட வேண்டும் என்று கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது வேண்டுகோள் வருமாறு :

தி.மு.கழகத்தின் அறிவிப்புக்கிணங்க “தமிழகத்தில் தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை மற்றும் உள்ளாட்சி துறைக்குச் சொந்தமான இடங்களில் அமைக்கப்பட்டுள்ள கழகக் கொடிக்கம்பங்களை சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை அளித்த தீர்ப்பினை ஏற்று திருப்பூர் மத்திய மாவட்டத்திற்குட்பட்ட திருப்பூர் தெற்கு சட்டமன்ற தொகுதி,

பல்லடம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள், தத்தமது பகுதிகளில் உள்ள தேசிய நெடுஞ்சாலை. மாநில நெடுஞ்சாலை மற்றும் உள்ளாட்சி துறைக்குச் சொந்தமான இடங்களிலும் பொது இடங்களிலும் வைத்துள்ள கழகக் கொடிக்கம்பங்களை உடனடியாக அகற்ற வேண்டுமெனவும், அவ்வாறு அகற்றப்பட்ட கழகக் கொடிக் கம்பங்களின் விவரங்களை மாவட்டக் கழகத்திற்கு தெரியப்படுத்திட வேண்டுமென என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு திருப்பூர் மத்திய மாவட்டச் செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் விடுத்துள்ள அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

---

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; டில்லி உயர்நீதிமன்ற நீதிபதி யஷ்வந்த் வர்மா வீட்டில் இருந்து, கணக்கில் வராத பணக்குவியல்கள் கட்டுக்கட்டாக எடுக்கப்பட்டதாகத் தகவல் வெளிவந்துள்ளதே ?

**பெரியதம்பி : ஆமாம் தம்பி; இந்த ‘நீதிபதி’யைப் போன்றோரைத்தான், முத்தமிழறிஞர் கலைஞர், ‘நீதி பாதி’என்றார்.**

**‘நீதி பாதி’ மட்டுமல்லாமல், ‘நிதி பாதி’ என்றும் ஆகியிருப்பது, இந்திய ஜனநாயகம் தொடர்ந்து மாசடைந்து வருவதையே உணர்த்துகிறது !**

**யஷ்வந்த் வர்மா, பா.ஜ.க. ஆளும் உ.பி. மாநிலத்தைச் சேர்ந்தவர் என்ற கூடுதல் தகவல், நமது எண்ணத்தை எங்கெங்கோ சுழன்றடிக்கிறது.**



மதுரை மாநகர் மாவட்ட முன்னாள் செயலாளர் சொ.காவேரிமணியம் 19ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சியை முன்னிட்டு அவனியாபுரத்தில் அவரது இல்லத்தில் உள்ள அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம், மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு மற்றும் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் கழக நிர்வாகிகள் மா.ஜெயராம், மூவேந்திரன், முருகவேல், சின்னம்மாள், அக்ரி கணேசன், சம்மட்டிபுரம் கணேசன், காவேரி சொக்கலிங்கம், முன்னாள் எம்.எல்.ஏ., முத்துராமலிங்கம், பாக்கியநாதன், பி.டி.மணிமாறன், ஏ.கே.ஆறுமுகம், கிருஷ்ணபாண்டியன், வக்கீல் அன்புநிதி, போஸ் முத்தையா, ஜீவன் ரமேஷ், குரும்பன், எஸ்.எஸ்.மாறன், சு.பா.கண்ணன், அண்ணாதுரை, திராவிட மாரி உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், குடும்பத்தினர் பங்கேற்றனர்

## சூலூரில் தெருமுனைக் கூட்டம்!

கோவை, மார்ச் 23 –

கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்களின் 72 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கை வேளாண் நிதிநிலை அறிக்கை 2025–2026 விளக்க தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் சூலூர் தொகுதிக்குட்பட பல்வேறு இடங்கலில் நடைபெற்றது.

கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில், தலைமைக் கழக பேச்சாளர்கள் சேலம் சுஜாதா, அதிரடி அல்தாப் ஆகியோர் கழக அரசின் நிதிநிலையை விளக்கி சிறப்புரையாற்றி னார்கள்.

கௌதமன், விஸ்வநாதன் மன்னவன், பேரூராட்சி மன்ற தலைவர்கள் தேவி, புஷ்பலதா செல்வராஜ், ரகு துரைராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## அந்துமணி சிந்துமணி



**அந்துமணி :** ஏண்டி சிந்து, 'கிக் வாலிபால்' உலகக் கோப்பை போட்டியை பாட்னாவில் தொடங்கி வைத்த போது, பீஹார் முதல்வர் நிதீஷ் குமார், தேசிய கீதத்தை அவமதித்திடும் வகையில் நடந்து கொண்டார் என்று செய்தி வெளிவந்துள்ளதே ?

**சிந்துமணி :** **ஆமாண்டி அந்து; அந்த நிகழ்ச்சியில் தேசிய கீதம் ஒலித்தபோது முதல்வர் நிதீஷ் குமார், தன் அருகில் இருந்த பீஹார் அரசின் முதன்மைச் செயலாளர் தீபக் குமாரின் தோளைத் தட்டிச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாராம்.**

**அது மட்டுமல்லாமல், தேசிய கீதம் முடிவடையும் முன்பே, மேடையைவிட்டு இறங்கிச் சென்றுவிட்டாராம்.**

**இவ்வாறு தேசிய கீதத்தை முழுவதுமாக அவமதித்த பீஹார் முதல்வரை, தேசாபிமானம் அற்றவர் - தேச விரோதி என்று, ஒன்றிய பா.ஜ.க.வினர் ' லேபிள்' ஒட்டிவிட மாட்டார்கள். அவர் அவர்களது கூட்டணியில் உள்ளவர் ஆயிற்றே !**

**மேலும் நிதீஷ் குமார் ஆதரவு, ஒன்றிய பா.ஜ.க. ஆட்சிக்கு அவசியம் ஆயிற்றே !**

**ஒன்றிய பா.ஜ.க.வைப் பொறுத்தவரை, தேசாபிமானம் என்பது ஆளுக்கு ஆள், இடத்துக்கு இடம், வேறுபாடு உடையதாயிற்றே !**

### கூடுதலாக 1000 திருக்கோயில்கள் இணைப்பு!

# விரிவுபடுத்தப்பட்ட ஒருகால பூஜைத் திட்டத் திருக்கோயில்களுக்கான ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, மார்ச் 23 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.03.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத் துறை மூலம் செயல்படுத்தப்படும் ஒருகால பூஜை திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள 17,000 திருக்கோயில் களுக்கான வைப்பு நிதியினை தலா 2.50 இலட்சம் ரூபாயாக உயர்த்திட 85 கோடி ரூபாய் மற்றும் இத்திட்டத்தை விரிவுப்ப டுத்தும் வகையில் கூடுதலாக 1,000 திருக்கோயில்களுக்கு ஒருகால பூஜை மேற்கொள்வதற்கு ஏதுவாக ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் தலா 2.50 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 25 கோடி ரூபாய், என மொத்தம் 110 கோடி ரூபாய்க்கான காசோலையினை தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பு நிதியாக முதலீடு செய்யும் விதமாக அதன் தலைமை நிதி அலுவலர் திருமதி பீ. ஜமீலா அவர்களிடம் வழங்கினார். மேலும், விரிவுபடுத்தப்பட்ட 1,000 ஒருகால பூஜைத் திட்ட திருக்கோயில் களுக்கு அதற்கான ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 அர்ச்சகர்களிடம் ஆணைகளை வழங்கினார்.

2021 - 2022 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், "12,959 திருக்கோயில்களுக்கு ஒரு கால பூஜைத் திட்டத்தை செயல்படுத்த ரூ.130 கோடி நிலை நிதி ஏற்படுத்தப்படும்" என அறிவிக்கப்பட்டது. அதன்படி, ஒருகால பூஜை நடைபெறும் 12,959 திருக்கோயில்களுக்கு ஏற்கனவே வைப்பு நிதியாக ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் வழங்கப்பட்டிருந்த ஒரு இலட்சம் ரூபாயை 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தி அரசு மானியமாக ரூ.130 கோடிக்கான காசோலையினை தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பு நிதியாக முதலீடு செய்யப்பட்டது.

மேலும், 2022-2023 ஆம் நிதியாண்டில் கூடுதலாக 2,000 திருக்கோயில்களுக்கு ஒருகால பூஜை திட்டம் விரிவு படுத்தப்பட்டு அரசு மானியமாக 40 கோடி ரூபாய்க்கான காசோலை மற்றும் 2023-2024 ஆம் நிதியாண்டில் கூடுதலாக 2,000 நிதி வசதியற்ற திருக்கோயில்களுக்கு இத்திட்டம் விரிவுப்படுத்தப்பட்டு அரசு மானியம் மற்றும் பொது நல நிதியாக ரூ.40 கோடிக்கான காசோலை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன.

2024-2025 ஆம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கையில், "ஒருகால பூசைத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் 17,000 திருக்கோயில்களின் வைப்புத் தொகை ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.2.50 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும். இவ்வாண்டு 1000 நிதி வசதியற்ற திருக்கோயில்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். இதற்கான மொத்த செலவினம் ரூ.110 கோடி அரசு நிதியாக வழங்கப்படும். ஏற்கனவே, 17,000 திருக்கோயில் அர்ச்சகர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாத உதவித் தொகை ரூ.1000/- இவ்வாண்டு கூடுதலாக சேர்க்கப்படும் 1000 திருக்கோயில்களின் அர்ச்சகர்களுக்கும் வழங்கப்படும்" என்று அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினை செயல்படுத்திடும் வகையில், ஒருகால பூஜை திட்டத்தில் உள்ள 17,000 திருக்கோயில் களுக்கு உயர்த்தப்பட்ட வைப்பு நிதிக்காக 85 கோடி ரூபாய், இத்திட்டத்தை விரிவுப்படுத் திடும் வகையில் 1,000 திருக்கோயில்களுக்கு வைப்பு நிதியாக 25 கோடி ரூபாய், என மொத்தம் அரசு மானியமாக 110 கோடி ரூபாய்க்கான காசோலையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பு நிதியாக முதலீடு செய்யும் விதமாக அதன் தலைமை நிதி அலுவலர் அவர்களிடம் வழங்கினார். மேலும், விரிவுபடுத்தப்பட்ட ஒருகால பூஜைத் திட்டத் திருக்கோயில்க ளுக்கு அதற்கான ஆணைகளை அர்ச்சகர்களிடம் வழங்கினார்.

ஒரு கால பூஜைத் திட்டத் திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் அர்ச்சகர்களின் பிள்ளைகளின் நலன்கருதி, அவர்களின் மேற்படிப்பிற்கு கல்வி உதவித்தொகையாக கடந்த 2 ஆண்டுகளில் 900 மாணவர்களுக்கு தலா 10,000 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, இணை ஆணையர் பொ.ஜெயராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### அகில இந்திய காவல் துறை விளையாட்டு கட்டுப்பாட்டு வாரியத்தின் சார்பில்

# 25-வது அகில இந்திய காவல் துறை துப்பாக்கிச் சுடுதல் போட்டி!

## வெற்றிபெற்ற காவலர்களுக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பதக்கம் – கேடயம் வழங்கினார்

*சென்னை, மார்ச் 23 -*

*துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அகில இந்திய காவல் துறை விளையாட்டு கட்டுப்பாட்டு வாரியத்தின் (AIPSCB) சார்பில் செங்கல்பட்டு மாவட்டம் ஒத்திவாக்கத் தில் உள்ள தமிழ்நாடு கமாண்டோ பள்ளி பயிற்சி வளாகத்தில் நடைபெற்ற 25 வது அகில இந்திய காவல் துறை துப்பாக்கி சுடுதல் போட்டியில் வெற்றி பெற்ற காவலர்களுக்கு இன்று (21.3.2025) எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பதக்கம் மற்றும் கேடயங்களை வழங்கினார்.*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு காவல்துறையானது அகில இந்திய காவல்துறை விளையாட்டு கட்டுப்பாட்டு வாரியத்தின் (AIPSCB) சார்பில் கடந்த 2023ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 23 வது அகில இந்திய காவல்துறை துப்பாக்கி சுடுதல் போட்டி (2022-2023), 2024 ஜீன் மாதத்தில் அகில இந்திய பெண்களுக்கான சிறப்பு துப்பாக்கி சுடுதல் போட்டி ஆகியவற்றை செங்கல்பட்டு மாவட்டம் ஒத்திவாக்கத்தில் உள்ள தமிழ்நாடு கமாண்டோ பள்ளிபயிற்சி வளாகத்தில் சிறப்பாக நடத்தியது. அதைத் தொடர்ந்து 2025 மார்ச் 17 முதல் 22 வரை 25வது அகில இந்திய காவல்துறை துப்பாக்கிசுடுதல் போட்டி (2024-2025) யினை இந்தியா முழுவதும் உள்ள காவல்துறையினர் பாராட்டும் வகையில் சிறப்பாக நடத்தியது.*

*25வது அகில இந்திய காவல்துறை துப்பாக்கி சுடுதல் போட்டியை யொட்டி, ரைபில் பிரிவில் 5 போட்டிகளும், ரிவால்வர் / பிஸ்டல் பிரிவில் 4 போட்டிகளும், கார்பைன் / ஸ்டன் கன் பிரிவில் 4 போட்டிகளும் என மொத்தம் 13 போட்டிகள் நடத்தப்பட்டன. இப்போட்டியில் பல்வேறு மாநிலங்கள் மற்றும் மத்திய ஆயுதப்படையைச் சேர்ந்த மொத்தம் 700 க்கும் மேற்பட்ட காவல் துறை அதிகாரிகள் / ஆளிநர்களைக் கொண்ட 30 அணிகள் பங்கேற்றன.*

*இந்த போட்டிகளில் ரைபிள் துப்பாக்கி சுடும் போட்டியில் சாம்பியன்ஷிப் கோப்பையை (சிறந்த அணி) அசாம் ரைபிள்ஸ் பாதுகாப்பு படையும், இரண்டாவது இடத்தை எல்லை பாதுகாப்பு படையும், மூன்றாவது இடத்தை அசாம் மாநில காவல்துறையும் பிடித்தார்கள்.*

*பிஸ்டல் / ரிவால்வர் துப்பாக்கி சுடும் போட்டியில் சாம்பியன்ஷிப் கோப்பையை (சிறந்த அணி) மத்திய சேமக் காவல் படையும், இரண்டாவது இடத்தை அசாம் ரைபிள்ஸ் பாது காப்பு படையும், மூன்றாவது இடத்தை தமிழ்நாடு காவல் துறையும் பிடித்தார்கள்.*

*கார்பைன் / ஸ்டென்கன் துப்பாக்கி சுடும் போட்டியில் சாம்பியன்ஷிப் கோப்பையை (சிறந்த அணி) இந்தோ - திபெத்திய எல்லைக் காவல் படையும், இரண்டாவது இடத்தை ஒடிசா மாநில காவல்துறையும், மூன்றாவது இடத்தை அசாம் ரைபிள்ஸ் பாதுகாப்பு படையும் பிடித் தார்கள்.*

*அனைத்து பிரிவுகளிலும் சிறப்பாக செயல்பட்டு ஒட்டு மொத்த சாம்பியன்ஷிப் கோப்பையை அசாம் ரைபிள்ஸ் பாதுகாப்பு படையும், இரண்டாவது இடத்தை எல்லை பாது காப்பு படையும் பிடித்தார்கள்.*

*மாநிலங்களுக்கிடையே ஒட்டு மொத்தமாக சிறப்பாக செயல்பட்ட அணியாக சாம்பியன்ஷிப் கோப்பையை தமிழ்நாடு காவல் துறையும், இரண்டாவது இடத்தை ஒடிசா மாநில காவல் துறையும் பிடி த்தார்கள்.*

*பிஸ்டல் / ரிவால்வர் துப்பாக்கி சுடும் பிரிவில் சிறப்பு பாதுகாப்பு படை (எஸ்.பி.ஜி) ஆய்வாளர் அமர் சிங்ஜி சிறந்த சுடுதலுக்கான (BEST SHOOT) பரிசையும், கார்பைன் / ஸ்டென்கன் துப்பாக்கி சுடும் பிரிவில் இந்தோ - திபெத்திய எல்லைக் காவல் படை காவலர் விஷால் குமார் சிறந்த சுடுதலுக்கான (BEST SHOOT) பரிசையும் வென்றார்கள்.*

*வெற்றி பெற்ற காவலர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதக்கம் மற்றும் கேடயங்களை வழங்கி, தோழமை உணர்வை வெளிப்படுத்தும் வகையில், இப்போட்டியில் பங்கேற்ற அனைத்து காவல் அணிகளின் சார்பில் நடைபெற்ற அணிவகுப்பு மரியாதையை ஏற்றார்.*

*இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், த.வேலு, உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்படைத் தலைவர் சங்கர் ஜிவால், காவல் துறை இயக்குநர் / காவல் உயர் பயிற்சியகம் சந்தீப் ராய் ரத்தோர், அகில இந்திய காவல் விளையாட்டு கட்டுப்பாட்டு குழும தலைவரின் பிரதிநிதி மற்றும் நுண்ணறிவுப் பிரிவு (ஐ.பி) சிறப்பு இயக்குநர் பிரவீன் குமார், , காவல்துறை கூடுதல் இயக்குநர் (செயலாக்கம்) முனைவர் இரா. தினகரன், கூடுதல் காவல் ஆணையர் (தெற்கு) முனைவர் என்.கண்ணன், மற்றும் காவல்துறை கலந்து கொண்டனர்.*

### பெரம்பலூர் வேப்பந்தட்டையில்

# முதல்வர் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம்!

## வீ.ஜெகதீசன் – எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. – சைதை சாதிக் சிறப்புரை!

*பெரம்பலூர், மார்ச் 23 -*

*பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை மேற்கு ஒன்றியம், பெரியம்மாபாளையம் கிராமத்தில், ஒன்றிய கழக செயலாளர் எஸ்.நல்லதம்பி தலைமையில், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் க.ரமேஷ் வரவேற்புரையில், ஒன்றிய அவைத்தலைவர் டி.அம்பேத்கர், ஒன்றிய துணைச் செயலாளர் மருதாம்பாள் செல்வக்குமார்,*

*ஒன்றிய பொருளாளர் க.ராமலிங்கம், ஒன்றிய துணைச் செயலாளர்கள் கே.கிருஷ்ணமூர்த்தி, டி.தங்கமணி, வி.முருகேசன், எஸ்.ராமகிருஷ்ணன், எம்.ரெங்கராஜ், டி.முருகேசன், மஞ்சுளா பரமசிவம், ஜாபருல்லா, மணிவண்ணன், பெரியசாமி, சவுந்தரராஜன்,பாண்டியன், ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் மீ.முகமது ஹாலித் ஆகியோர் முன்னிலையில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது*

*இதில், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் தலைமைக் கழக பேச்சாளர் சைதை.சாதிக் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்கள். தூய்மை பணியாளர்கள் 50 பேருக்கு அரிசி, புத்தாடை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.*

*இதில் மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர், நூருல் ஹிதா இஸ்மாயில், ஒன்றிய செயலாளர்கள் சி.ராஜேந்திரன்,தி.மதியழகன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன்,ந.ஜெகதீஷ்வரன், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.அண்ணாதுரை, ஆர்.முருகேசன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன்(எ)ஹரிபாஸ்கர், முன்னாள் பெருந்தலைவர் க.ராமலிங்கம், பேரூர் கழக செயலாளர்கள் ஆர்.ரவிச்சந்திரன், செல்வலெட்சுமி சேகர், மாவட்ட பிரதிநிதி எஸ்அழகுவேல், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ரா.சிவா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ஒன்றிய தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் அ.சுல்தான் நன்றியுரையாற்றினார்.*



கோட்டக்குப்பம் நகர தி.மு.க. சார்பில், சமூக நல்லிணக்க இஃப்தார் நிகழ்ச்சியில் விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ கலந்து கொண்டு சிறப்பித்தார். உடன் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், நகர கழகச் செயலாளர் எஸ்.எஸ். ஜெயமூர்த்தி, ஆர்.எஸ்.வாசன், திருவக்கரை ஜி.பாஸ்கர், பி.கே.டி.முரளி, இரா.மைதிலி ராஜேந்திரன், கே.ஆர்.எஸ்.ராஜி, உஷா முரளி, மணி, பருவ கீர்த்தனா விநாயகமூர்த்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



வேலூர் கோட்டை மைதானத்தில் புத்தக திருவிழாவை மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ திறந்து வைத்தார். உடன் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, மாவட்ட ஆட்சியர் வே.இரா. சுப்புலட்சுமி, குடியாத்தம் சட்ட மன்ற உறுப்பினர் அமலுவிஜயன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மண்டல குழு தலைவர் வீனஸ் நரேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.